SYDNEY WEST Area Health Service

Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.

**AHS7295 Jaundice in newborn babies – Tamil**

# புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் மஞ்சட் காமாலை நோய்

மறுப்புக்கூற்று
இந்தத் தகவல் அட்டை கல்விப்பயிற்சிக்கு மட்டும் தயாரிக்கப்பட்டது. தயவுசெய்து இத்த தகவல் உங்களுக்கு பொருந்துமா என்பதை உறுதிசெய்ய உங்களது வைத்தியர் அல்லது வேறு உடல்நல நிபுணர் ஆகியோரைக் கலந்தாலோசிக்கவும்.

புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு மஞ்சட் காமாலை என்றால் குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களது தோலும் கண்களின் வெள்ளைப் பகுதிகளும் மஞ்சள் நிறமாக மாறுவதுதான். இயல்பாக புதிதாகப் பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒன்று தொடக்கம் அரைவாசிக் குழந்தைகளுக்கு வெளிப்படையான மஞ்சட் காமாலை நோய் ஏற்படுகிறது. அநேகமாக இது பிரச்சினைகளை ஏற்படுத்துவதில்லை. பொதுவாக பிறந்த ஒரு மாதத்தின் பின் இந்த நோய் மங்கி மறைந்து போகிறது. மஞ்சட் காமாலை நோய் ஒரு வாரத்தின்பின் குணமடையாவிட்டால் அல்லது இரண்டு வாரங்களின்பின் நோய் இன்னும் இருந்தால் உங்களது வைத்தியரை அல்லது உள்ளூர் வைத்தியசாலையைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## மஞ்சள் நிறம் ஏற்படுவதற்குரிய காரணங்கள் என்ன?

ஒரு மனித உடலில் எல்லா நேரங்களிலும் புதிய இரத்தம் உற்பத்திசெய்யப்பட்டு பழைய இரத்தம் அழிக்கப்பட்டு வருகின்றன. பழைய இரத்தம் அழிக்கப்படும்போது உண்டாக்கப்படும் ஒரு பொருளின் பெயர் பிலிறுபின் (bilirubin) ஆகும். பிலிறுபின் இயல்பாக ஈரலிற்குச் சென்று பின் மலத்தின் மூலமாக உடலைவிட்டு வெளியேறுகிறது. குழந்தை பிறந்தமுதல் சில நாட்கள் மட்டும் குழந்தையின் ஈரல் பின்பு வேலை செய்வது போல் நன்றாக வேலை செய்யாது. இதனால் இரத்தத்தில் பிலிறுபின் சிறிது சிறிதாக சேர்க்கப்பட்டு வருகிறது. இது தோலையையும் கண்களின் வெள்ளைப் பகுதிகளையும் மஞ்சள் நிறமாக மாற்றுகிறது.

## மஞ்சட் காமாலை கேடு விளைவிக்குமா?

பிலிறுபின் எண்ணிக்கையின் மட்டம் கூடுதலாக உயர்ந்தால் குழந்தை மந்தநிலையை அடையச் செய்யும். ஆகக்கூடிய மட்டத்திற்கு சென்றால் செவிப்புல பிரச்சினைக்கும் மூளைச் சேதத்திற்கும் இட்டுச் செல்லும். வைத்தியசாலையில் பிலிறுபினின் மட்டம் அதிகமாக உயராமல் இருப்பதை உறுதி செய்யக் கவனம் எடுக்கப்படும். ஈரல் நோய் காரணமாகவும் மஞ்சட் காமாலை நோய் ஏற்படலாம். இதனால் தான் உங்கள் உள்ளூர் வைத்தியரைத் தொடர்பு கொள்வது முக்கியம். ஈரல் நோயிற்குரிய ஒரு அடையாளம் உங்களது குழந்தையின் மலம் கடுமையான மஞ்சள் நிறமல்லாமல் வெளிறி அல்லது மங்கலாக இருக்கும்.

## எந்தக் குழந்தைகளுக்கு உயர் மட்ட மஞ்சட் காமாலை ஏற்படுகிறது?

மஞ்சட் காமாலை ஏற்படுவதற்கு கூடிய வாய்ப்புள்ள குழந்தைகளில் பின்வருபவர்கள் உள்ளடங்குவர்:

- பருவமுறாத குழந்தைகள்
- தொற்று நொயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்
- றீசஸ் (Rhesus) அல்லது ஆர் எச் குழந்தைகள் – தாயின் இரத்த ரகத்திற்கு வேறுபட்ட இரத்த ரகம் உடைய குழந்தைகள். இதன் காரணமாக எதிர்த்தாக்கம் ஏற்பட்டு குழந்தையின் இரத்த அணுக்கள் விரைவாக அழிக்கப்பட்டு வருகின்றன.

## எவ்வளவு மஞ்சட் காமாலை குழந்தைக்கு இருக்கிறது என்பதை அளத்தல்

ஒரு இரத்தப் பரிசோதனை பிலிறுபின் மட்டத்தை சரிபார்க்கும். சில வைத்தியசாலைகளில் இரத்தப் பரிசோதனை தேவையா என்பதை அறிய குழந்தையின் தோலின் மீது வைக்கும் ஒரு கருவியை உபயோகிக்கிறார்கள். இது ஒரு ஸ்க்ரீனிங் பரிசோதனை (screening test) போல் மேற்கொள்ளப்படுகிறது.
வைத்தியசாலை அலுவலர்கள் பின்வரும் காரணங்களுக்காக ஒரு இரத்தப் பரிசோதனையை மேற்கொள்வார்கள்:

- முதிரா நிலை போன்ற அபாய அறிகுறிகள் இருந்தால்
- பிறந்த முதற் சில நாட்களில் மஞ்சட் காமாலை இருந்தால்

## சிகிச்சை

புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு நல்ல நீராகாரம் அத்தியாவசியம். மிதமான நீர் கூறகற்றல் (dehydration) அறிகுறிகள் அடிக்கடி மஞ்சட் காமாலை நோயை மிகைப்படுத்துகிறது. முதல் வாரத்தில் மிதமான மஞ்சட் காமாலை தென்பட்டால் நீராகாரத்தைத் தவிர வேறு ஏதும் சிகிச்சை தேவைப்படாது. நடுநிலையான மஞ்சட் காமாலை தென்பட்டால் குழந்தையை நிர்வாணமாக (கண்களில் ஒரு பாதுகாப்புக் கவசத்துடன்) பிரகாசமான வெளிச்சத்திற்கு கீழ் அல்லது ஒரு நீல நிற வெளிச்சத்தின் கீழ் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த ஒளி தோலிலுள்ள பிலிறுபினை உடையப்பண்ணி மஞ்சட் காமாலையை மங்கச் செய்கிறது. இந்த வெளிச்சம் சார்ந்த சிகிச்சை குழந்தையை தளர்வான மலத்தைக் கழிக்கச் செய்யும். இதை குழந்தைக்கு கொடுக்கப்படும் நீராகாரத்தை அதிகரிப்பதன் மூலம் கையாளப்படும். கண்காணிக்கப்படாமல் குழந்தையை நேரடியான சூரிய வெளிச்சத்தில் வைப்பது வெங்குரு ஏற்பட்டு தீங்கு விளைவிக்கும். கடுமையான மஞ்சட் காமாலை ஏற்பட்டால் குழந்தைக்கு ஒரு விசேட குருதியேற்றம் மேற்கொள்ளப்பட்டு இதன் மூலம் குழந்தையின் இரத்தம் புதிய இரத்தத்தால் பரிமாற்றம் செய்யப்படும். இதனால் உடலிலுள்ள பிலிறுபின் கழுவப்பட்டு அகற்றப்படும்.

## மஞ்சட் காமாலையினால் ஏதாவது நீண்டகாலப் பிரச்சினைகள் இருக்கிறதா?

அநேகமாக மஞ்சட் காமாலை ஏற்பட்டபின் குழந்தைக்கு ஒரு நீண்ட காலப் பிரச்சினைகள் எதுவும் இல்லை. உயர்ந்த மட்ட மஞ்சட் காமாலையினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஒழுங்கான இடைவெளிகளில் அவர்களது செவிப்புலத்தை சரிபார்க்க வேண்டும். இதை உங்களது வைத்தியருடன் அல்லது முற்பட்ட குழந்தைப் பருவத் தாதியுடன் கலந்தாய்வது நன்று. ஆகக்கூடிய மஞ்சட் காமாலை நோய் மட்டத்தினால் ஏற்படும் மூளைப்பாதிப்பு இப்போது மிகவும் அருமை. ஏனென்றால் முற்பட்ட வெளியேற்றத் திட்டத்தின் கீழ் வைத்தியசாலையிலும் வீட்டிலும் குழந்தை செலவளிக்கும் முதற் சில நாட்களில் குழந்தையின் மஞ்சட் காமாலை மட்டங்கள் கவனமாகக் கண்காணிக்கப்படப்படுகிறது.

## நினைவுகூருங்கள்

- மஞ்சட் காமாலை ஒரு வாரத்தின் பின் மங்காவிட்டால் அல்லது இரு வாரத்திற்கு நீடித்தால் உங்கள் வைத்தியர் அல்லது உள்ளூர் வைத்தியசாலையைத் தொடர்பு கொள்ளவும்.
- மஞ்சட் காமாலை ஈரல் நோய் போன்ற வேறு காரணங்களினால் ஏற்படலாம். இதனால் தான் மஞ்சட் காமாலை மங்காவிட்டால் உங்களது உள்ளூர் வைத்தியரைத் தொடர்பு கொள்வது முக்கியம்.